

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 74 வது வட்ட தி.மு.க. சார்பில் வடடச் செயலாளர் எஸ். புஸ்பராஜ் தலைமையில் அம்பேத்கர் பொதுநல மன்றம் சந்திர யோகி சமாதி சாலை சாமியார் மடம் அருகில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கினார். இந்நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன், பகுதி துணை செயலாளர் பெரம்பூர் ஆர்.ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

என்றென்றும் கலைஞர்!

தோன்றிற் புகழோடு
தோன்றியவர் கலைஞர்தான்
பிறப்பு முதல் இறப்பு வரை
எதிர்ப்புகளை முறியடித்துச்
சிறப்புகளைப் பெற்றிட்ட
செந்தமிழ்த் தலைவன் நீதான்!

போட்டிகளைப் பற்றியெல்லாம்
எள்ளளவும் கவலையின்றி
வேட்டி கட்டிய தமிழனாக
வெற்றிகளைக் குவித்தவர்!

அடக்குமுறைகளை எதிர்த்தே
அரசியல் பயணம்
தொடங்கியதால்
அடக்கம் செய்வதற்குக் கூட
அடக்குமுறைகளை
எதிர்த்து வென்றாய்!

உலகத் தலைவர்களில்
உனக்கிருந்த எதிரிகளைப் போல்
ஒருவருக்கும் இருந்ததில்லை
நீயோ
ஒருபோதும் அஞ்சியதில்லை!

இறந்தவரிடம் பகைமறந்து
நடப்பதைத்தான் இதுவரை
பார்த்துள்ளோம்
இறந்த பின்னும் பகைவரோடு
போராடி வென்றவர்
நீ ஒருவன் தான் தலைவா!

வள்ளற்பெருமான் சொல்லிய
மரணமில்லாப் பெருவாழ்வு
வாழ்பவர் நீங்கள் மட்டும்தான்
மரணத்திற்குப் பின்னும்!

அரசியல் வானில் தோன்றிய
அதிசய விண்மீன்
இலக்கிய உலகில் வந்த
இணையில்லா இமயம்!

தரமாக மற்றவரை
மதித்திட்ட தமிழ்ப்பண்பு
இலக்கியவாதிகளை
நேசித்த தாயன்பு!

தமிழ்ச்சமுதாயம்
சுவாசித்த மூச்சுக் காற்று
தமிழ்மானம் காத்திட்ட
தன்னேறில் கவிதை ஊற்று!

எதிரிகளையே கண்டு கண்டு
களை எடுத்த புதிர்
ஏழையர்க்கு வாழ்வளிக்கத்
தோன்றிய கதிர்!

திருக்குவளை தந்திட்ட
தீப்பிழம்பு
அருட்கொடையாய் தளபதி
மு.க. ஸ்டாலின் எனும்
கருணைக் கொடை வழங்கிய
முத்தமிழ் அறிஞர்
கலைஞரின்
புகழ் போற்றி வணங்குகிறேன்!

கவிஞர்கோ, மக்கள் கவிஞர்
அரு. நாகப்பன்
காரைக்குடி

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்யொட்டி கும்மிடிப்பூண்டி தொகுதியில் கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவு!

தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார்!

திருவள்ளூர், ஜூன் 4-
திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி. கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், கும்மிடிப்பூண்டி பேரூர், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியங்களில் முத்தமிழ்றிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள்யொட்டி முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான டி ஜெ.கோவிந்தராஜன் கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்

கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் ஆரம்பாக்கம் ஊராட்சியில் 5 இடங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும் முத்தமிழஞர் அறிஞர்

திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி 200 நபர்களுக்கு அறுசுவை உணவும், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம். கவரைப்பேட்டை ஜி.என்.டி.சாலையில் உள்ள கும்மிடிப்பூண்டி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முத்தமிழஞர் அறிஞர் திருவுருவ படத்திற்கு மலர் து•வி அஞ்சலி செலுத்தி 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் மு மணியாலன், எஸ்.ரமேஷ். இரா அறிவழகன் மு.பாஸ்கரன் ஜெ.மோகன்பாபு, மு.கேசவன், பா அறிவழகன் பா.பரத்குமார், கே.வி.நாகராஜ். கே.வி.ரவி, நரேந்திரன், கே.கதிரவன், லால், வி.சாண்டில்யன் பி.கே.நாராயணசாமி கே என் பழனி, போண்டா சிவா, மஸ்தான் அருண்மொழி விக்னேஷ், அப்துல் லத்தீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா. சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு நொளம்பூர் வே ராஜன் அவர்களின் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர் கே.நீலகண்டன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு ஆகியோரின் வரவேற்புரையில் வட்டத்திற்கு உட்பட்ட அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கினார்.

சென்னை மேற்கு மாவட்டம் தொழிலாளர் அணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் அவர்கள் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 110 அ வட்டத்தில் கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது இதில் வட்ட கழக செயலாளர் த. குணசேகர் மாவட்ட அமைப்பாளர் மு. சீனிவாசன் மாவட்ட துணை அமைப்பாளர் நா. நாகராஜ் .அ. அமரேசன் பகுதி அமைப்பாளர்கள் வாணி மஹால் சரவணன் அண்ணாதுரை சேஷாத்திரி ராம்குமார் ஆ.புத்திரி ஆட்டோ மணி முருகன் லட்சாதிபதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி, 114 (அ) வட்ட தி.மு.க. சார்பில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன் எம்.சி, வட்டக் கழகச் செயலாளர் ஏ. தமீம்அன்சாரி மற்றும் வட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்றனர்.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு லட்சணம்!

ஆன்மிக நகரான திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பெண்களை நிர்வாணமாக்கி பாலியல் தொல்லை! உடன் வந்தவர்களை அடித்து விரட்டி நகை, பணம் கொள்ளை!

25க்கும் மேற்பட்ட பெண்களை ஆபாச வீடியோ எடுத்து சீரழிப்பு!

திருவண்ணாமலை, ஜூன்.4–
திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பெண்களிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு, நிர்வாண வீடியோ எடுத்து மிரட்டி சித்ரவதை செய்து, நகைகளை கொள்ளையடித்த 8 வாலிபர்களை போலீசார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து கைப்பற்றிய செல்போன்களில் 25க்கும் மேற்பட்ட இளம் பெண்களின் ஆபாச வீடியோக்கள் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த கும்பலை சேர்ந்த சிறுவன் உட்பட 3 பேரை தனிப்படையினர் தேடி வருகின்றனர்.

அதன்பேரில், இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் வழக்குப்பதிந்து விசாரணை மேற் கொண்டார். இதுதொடர்பாக, திருவண்ணாமலை ரூரல் டிஎஸ்பி ராஜன் தலைமையில் தனிப்படை அமைக்கப் பட்டு கடந்த 2 நாட்களாக விசாரணை நடத்தப்பட்டது. இதில், திருவண்ணாமலை அடுத்த ஆடையூர் கிராமத்தை சேர்ந்த வாசுதேவன்(27) என்பவரை நேற்று போலீசார் கைது செய்தனர். இவர் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி உட்பட பல்வேறு வழக்குகள் உள்ளன. அதைத்தொடர்ந்து, தனிப்படை போலீசார் வாசுதேவனின் செல்போனை பறிமுதல் செய்து தொடர்ந்து விசாரணை நடத்தினர்.

அதில், இந்த சம்பவத்தில் தொடர்புடைய அவரது நண்பர்களான அடையூரை சேர்ந்த ஆகாஷ், பெரிய பாலியப்பட்டு கிராமம் தமிழ் என்கிற தமிழரசன், அஸ்வநாதசுரணை பகுதியை சேர்ந்த அப்பு, லேலே என்கிற அரிகரன், சர்மா, சேந்தமங்கலத்தை சேர்ந்த அருண்குமார், பாவாஜி நகரை சேர்ந்த சிவகணேசன் என்கிற சூர்யா ஆகிய 7 பேரை நேற்று மாலை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

ஆபாச வீடியோக்கள்!

கைது செய்யப்பட்ட வாலிபர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல் போன்களில், 25க்கும் மேற்பட்ட இளம் பெண்களின் ஆபாச வீடியோக்கள் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக் கிறது. இந்த கும்பலை சேர்ந்த சிறுவன் உட்பட 3 பேரை தனிப்படையினர் தேடி வருகின்றனர்.

அதன்பேரில், இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் வழக்குப்பதிந்து விசாரணை மேற் கொண்டார். இதுதொடர்பாக, திருவண்ணாமலை ரூரல் டிஎஸ்பி ராஜன் தலைமையில் தனிப்படை அமைக்கப் பட்டு கடந்த 2 நாட்களாக விசாரணை நடத்தப்பட்டது. இதில், திருவண்ணாமலை அடுத்த ஆடையூர் கிராமத்தை சேர்ந்த வாசுதேவன்(27) என்பவரை நேற்று போலீசார் கைது செய்தனர். இவர் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி உட்பட பல்வேறு வழக்குகள் உள்ளன. அதைத்தொடர்ந்து, தனிப்படை போலீசார் வாசுதேவனின் செல்போனை பறிமுதல் செய்து தொடர்ந்து விசாரணை நடத்தினர்.

அதில், இந்த சம்பவத்தில் தொடர்புடைய அவரது நண்பர்களான அடையூரை சேர்ந்த ஆகாஷ், பெரிய பாலியப்பட்டு கிராமம் தமிழ் என்கிற தமிழரசன், அஸ்வநாதசுரணை பகுதியை சேர்ந்த அப்பு, லேலே என்கிற அரிகரன், சர்மா, சேந்தமங்கலத்தை சேர்ந்த அருண்குமார், பாவாஜி நகரை சேர்ந்த சிவகணேசன் என்கிற சூர்யா ஆகிய 7 பேரை நேற்று மாலை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

ஆபாச வீடியோக்கள்!

கைது செய்யப்பட்ட வாலிபர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல் போன்களில், 25க்கும் மேற்பட்ட இளம் பெண்களின் ஆபாச வீடியோக்கள் இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக் கிறது. இந்த கும்பலை சேர்ந்த சிறுவன் உட்பட 3 பேரை தனிப்படையினர் தேடி வருகின்றனர். இந்த கும்பல் தனியாக அல்லது ஆண் நண்பர்களுடன் கிரிவலம் செல்லும் இளம்பெண்களை மிரட்டி அழைத்து சென்று நிர்வாணப்படுத்தி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு வீடியோக்கள் எடுத்து மிரட்டி பணம், நகைகள் ஆகியவற்றை அபகரித்துள்ளனர்.

இதேபோல, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த 30 வயதான மற்றொரு இளம் பெண் கடந்த 30ம் தேதி பவுர்ணமி கிரிவலம் முடிந்து இரவு மீண்டும் உறவினருடன் பைக்கில் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது திருவண்ணாமலை– செங்கம் சாலையில் பெரியபாளிப்பட்டு அருகே உறவினர் இயற்கை உபாதை கழிக்க பைக்கை நிறுத்திவிட்டு சென்றுள்ளார். அப்போது பின்தொடர்ந்து வந்த கும்பல், உறவினரை தாக்கி அங்கிருந்து விரட்டி உள்ளனர். பின்னர் இளம்பெண்ணை நிர்வாணப்படுத்தி பாலியல் தொல்லை கொடுத்து வீடியோ எடுத்துள்ளனர்.

தொடர்ந்து பல மணிநேரம் அங்கேயே நிர்வாணமாக அமர வைத்து மிரட்டி பணம், நகைகளை பறித்துள்ளனர். இதுதொடர்பாக இளம்பெண் நேற்றிரவு திருவண்ணாமலை மேற்கு போலீசில் புகார் அளித்தார். ஏற்கனவே கைதானவர்கள் தான் இந்த இளம்பெண்ணிடமும் அத்துமீறலில் ஈடுபட்டு ஆபாச வீடியோ எடுத்தது தெரியவந்தது. இதேபோல் செல்போன்களில் உள்ள வீடியோக்களில் பதிவாகியுள்ள இளம் பெண்கள் குறித்தும் போலீசார் ரகசியமாக விசாரித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக போலீசார் தொடர்ந்து நடத்தும் தீவிர விசாரணையில், மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகும் என தெரிகிறது. ஆன்மிக நகரான திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற இளம்பெண்களை மிரட்டி கும்பல் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

காவல் நிலையம் அருகிலேயே கொடூரம்!

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் சமீப காலமாக பக்தர்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. கிரிவலப்பாதையின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள காவல் உதவி மையங்கள் பயன்பாடு இல்லாமல் பூட்டி வைத்துள்ளனர். 24 மணி நேரமும் பைக் ரோந்து நடைபெறும் என்ற அறிவிப்பும் முழுமையாக பின்பற்றுவதில்லை.

மேலும், இரவு நேர ரோந்துப்பணியில் போலீசார் கவனம் செலுத்துவதில்லை என பக்தர்கள் புகார் தெரிவிக்கின்றனர். கிரிவலப்பாதையில் பக்தர்களின் பாதுகாப்புக்காகவே மேற்கு காவல் நிலையம் தொடங்கப்பட்டது. ஆனால், அந்த காவல் நிலையத்தில் இருந்து சுமார் 1 கி.மீ தூரத்திலேயே இந்த கொடூர சம்பவம் நடந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இரவு நேரங்களில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் வகையில், போலீசார் தொடர்ந்து ரோந்துப்பணியிலும், கண்காணிப்பிலும் ஈடுபட வேண்டும் எனவும், குறிப்பாக கிரிவலப்பாதையை இணைக்கும் சாலைகள் இருள் சூழ்ந்து குற்றச் சம்பவங்கள் நடைபெற வாய்ப்புள்ள பகுதியாக மாறியிருப்பதால் அங்கும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதோடு, கிரிவலப்பாதையில் பொருத்தியிருக்கும் சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்களும் பெரும்பாலான நேரங்களில் செயல்படுவதில்லை என்ற புகார் எழுந்துள்ளது. எனவே, நவீன கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்க வேண்டும் என பக்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

போலி சாமியார்கள் மூலம் கஞ்சா நடமாட்டம்!

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் தங்கியிருக்கும் சாமியார்களில், சிலர் குற்றப் பின்னணி உள்ள நபர்களாக இருப்பது சமீபத்தில் நடத்திய போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. ஆனாலும், அவர்களை நிரந்தரமாக அப்புறப்படுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இங்குள்ள போலி சாமியார்கள் மூலம், கஞ்சா நடமாட்டம் சமீபகாலமாக பெருகியிருக்கிறது.

அவர்கள் மூலம் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் கைகளுக்கு மாறும் கஞ்சா, பாலியல் பலாத்கார சம்பவங்கள் நடைபெற அடித்தளமாக அமைகிறது என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். அதோடு, கிரிவலப்பாதையில் பொருத்தியிருக்கும் சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராக்களும் பெரும்பாலான நேரங்களில் செயல்படுவதில்லை என்ற புகாரும் எழுந்துள்ளது.

தனியாக அல்லது ஆண் நண்பர்களுடன் கிரிவலம் செல்லும் இளம்பெண்களை இக்கும்பல் மிரட்டி அழைத்து சென்று நிர்வாணப்படுத்தி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு வீடியோக்கள் எடுத்து மிரட்டி பணம், நகைகள் ஆகியவற்றை அபகரித்துள்ளது.

இந்த கும்பல் தங்களுடைய நண்பர்கள் சிலரையும் வரவழைத்து பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்து உள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட செல்போன்களில் உள்ள வீடியோக்களில் பதிவாகியுள்ள இளம்பெண்கள் குறித்தும் போலீசார் ரகசியமாக விசாரித்து வருகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ் சுதர்சனம் விநாயகபுரம் சமர்ப்பணம் இல்ல மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவையான அரிசி பால் முட்டை காய்கறிகள் மளிகை பொருட்களை வழங்கி அவர்களுடன் கேக் வெட்டி கொண்டாடினார். உடன் வட்ட செயலாளர் டி.சுந்தரம், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.பார்த்தசாரதி, அபிப்ரஹ்மான், இ.இராமன், கே. நரேந்திரன், எஸ்.என்.ராஜி, எம்.சீனிவாசன், ஏவி முருகன், காஞ்சி சண்முகம், சி. பரமேஸ்வரி, சி.உமா மகேஸ்வரி, மீனம்மாள், சாய்ரா பானு, கவி, பிரியா, தயாளன், வி.பாஸ்கர், பி.தேவராஜ், பிரவீன், கௌதமன், ஆர்.சி.ஜெயக்குமார், சக்கரபாணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி எழும்பூர் வடக்கு பகுதி 78 அ வட்டத்தில் டி. கே. முதலி தெரு அனந்தகிருஷ்ணன் தெரு சந்திப்பில் பகுதி பிரதிநிதி சி.குணசேகரன் தலைமையில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு. மற்றும் 78 அ வட்ட செயலாளர் ந.பாலு ஆகியோர் முன்னிலையில் முன்னாள் வட்ட கழக செயலாளர் ஆர்.புருஷோத்தமன் கழக கொடி ஏற்றினார் வழக்கறிஞர் அணி முன்னாள் மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் திராவிடன் விஜய்போஸ் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் சூளை ரத்தினம், சோனி, ரமேஷ், பி.கே.மனோஜ், ஜி.பிரேம் குமார் வி.எஸ்.விஷால், திருமதி நீலாவதி சீனிவாசன் பி.வினோத்குமார் மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டத்தில் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த பிறந்தநாள் விழா முன்னிட்டு கழக மருத்துவர் அணி செயலாளர், முன்னாள் ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் அறுசுவை உணவு வழங்கினார். இதில் மா.பா.அன்புதுரை, கோ.யுவராஜ், மல்லிகா யுவராஜ் எம்.சி., பா.வினோத்குமார், ஜெ.மதரா, மா.வேலுமணி, எஸ்.ரமேஷ், பி.திருத்தணி, எம்.காசி, டி.பிரபா, எஸ்.சேகர், கி.தியாகராஜன், ஏ.கன்னியப்பன், கே.கோதா, கூ.ஆடல் அரசு, ஆர்.வி.சௌந்தர், கே.பி.ஜெயராமன், எஸ்.பழனி, எஸ்.பாஸ்கர், போட்டோ சுரேஷ், என். அருண்குமார், தீபன், சக்ரவர்த்தி, ஏ.செந்தில்குமார், வி.வி.மணி, ஆனந்த, கிருஷ்ணன், பச்சையப்பன், தனலட்சுமி, ராணி மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து சிறப்பித்தனர்.